**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102085

1. District / மாவட்டம் : தஞ்சாவூர் PS / காவல்நிலையம்: V&AC தஞ்சாவூர் Year / ஆண்டு: 2018 FIR No. / மு.த.அ. எண்: 02/2018 Date / நாள்: 18.01.18

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: u/s. 7 & 8 of PC Act 1988
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் : Date from / நாள் முதல் : Date to / நாள் வரை : First week of January 2018 & 10.01.2018 / 05.00 pm
Time Period / நேர அளவு : Time from / நேரம் முதல் : Time to / நேரம் வரை :
(b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : Time / நேரம் : 18.01.2018 / 10.00 hrs complainant arrived to V&AC Office
(c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time / நேரம் : 18.01.2018 / 11.30 hrs FIR registered

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Office of the A2 in Thanjavur Corporation and
Beat Number / முறைக் காவல் எண் : (b) Address / முகவரி : House of A1 in Vadakku Vasal Thanjavur.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District / மாவட்டம் : Thanjavur

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : துரை. சம்பந்தம் (D. Sambantham) (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர் : S/o. Duraichamy Nattar
(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு : 1951 (d) Nationality / நாட்டினம் : (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
Date of Issue / வழங்கப்பட்ட நாள் : Place of Issue / வழங்கப்பட்ட இடம் :
(f) Occupation / தொழில் : Rtd. Railway clerk. (g) Address / முகவரி : No. 1/61 Periya Pudupattinam Koolavasthachavadi. Kodavasal Thanjavur

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) / தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) A1. R. Nagaraj. Vadakku Vasal, Thanjavur. A2. R. M. Varatharaj, Commissioner Municipal Corporation, Thanjavur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: / குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. **Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)**

10. **Total value of properties stolen / involved :**
**களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு**

11. **Inquest Report / Un-natural death Case No. if any:**
**பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்**

12. **FIR Contents (Attach separate sheet, if required) :**
**முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)**

<u>பணிந்து அனுப்பப்பட்டது:</u>

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான், 18.01.2018ம் தேதி 10.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.துரை.சம்பந்தம், த/பெ.துரைசாமி நாட்டார், No.1/61 பெரிய புதுப்பட்டிணம், கீழ வஸ்தாச்சாவடி, தஞ்சாவூர் என்பவர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், துரை.சம்பந்தம், S/o.துரைச்சாமி நாட்டார், No.1/61 பெரிய புதுப்பட்டிணம், கீழ வஸ்தாச்சாவடி, தஞ்சாவூர். பெறுநர், உயர்திரு லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், தஞ்சாவூர். அய்யா, நான் தஞ்சாவூர் கீழவஸ்தாசாவடி பெரிய புதுப்பட்டிணத்தில் எனது குடும்பத்தினருடன் வசித்து வருகின்றேன். நான் இரயில்வேயில் கிளார்க் ஆக பணிபுரிந்து 2011 ல் ஓய்வுபெற்றுவிட்டேன். தஞ்சாவூர் நாஞ்சிக்கோட்டை, நாடார் காலனியைச் சேர்ந்த லேட்.லெட்சுமணமூர்த்தி என்பவரின் மனைவி பேபி என்பவரும் அவரது மகள் காயத்ரி, மகன் சரவணன் ஆகியோருக்கு சொந்தமாக தஞ்சாவூர் முனிசிபல் எல்லைக்குட்பட்ட வண்டிக்காரத் தெருவில் பிளாக்-76 ல் பட்டா எண்.2465,

13. **Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.**

**எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.**

**FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.**
**மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.**

14. **Signature / Thumb Impression of the Complainant / Informant**
**குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு**
18/01/18

**Signature of the Officer in-charge, Police Station**
**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்**

15. **Date & Time of despatch to the court:**
**நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்**
18.01.18 / 14.30 hrs

**Name: பெயர்** R. TAMIL SELVI, Inspector of police
**Rank: நிலை** ……………………**No. எண்** ………
VAC, Thanjavur

புல எண்.3163/4 புதிய புல எண்.43 ல் 15509 சதுர அடி காலிமனையை அவர்களால் நேரடியாக பராமரிக்க முடியாத காரணத்தினால் என்னை முழு அதிகாரம் பெற்ற முகவராக நியமித்து 31.07.2011ல் பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார்கள். அந்த ஆவணம் தஞ்சாவூர் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1059/2011 ஆக 01.08.2011 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கு தஞ்சாவூர் மாநகராட்சியில் காலி மனை வரி விதிப்பு செய்யக்கோரி 18.08.2017 அன்று எனது பெயரில் நான் தஞ்சாவூர் மாநகராட்சியில் மனு கொடுத்திருந்தேன். இது சம்பந்தமாக 20.09.2017 தேதியிட்ட அறிவிப்பை மாநகராட்சி வரி வசூல் செய்யும் அலுவலர் 30.09.2017 அன்று என்னிடம் கொடுத்தார். அந்த அறிவிப்பில் பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் வரி விதிப்பு செய்ய இயலாது என்றும், வில்லங்கச்சான்று மற்றும் மூலப்பத்திர நகலை சமர்பிக்க அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனால் மேற்படி மனையானது பூர்வீக சொத்து என்பதால் மூலப்பத்திரம் கிடையாது, மாறாக புதுப்பட்டிணம் கிராம பட்டா எண்.2465, சிட்டா, வில்லங்கச்சான்று ஆகியவற்றை 03.10.2017 அன்று நான் மாநகராட்சி அலுவலகத்தில் கொடுத்தேன். ஆனால் நீண்ட நாட்களாக நான் கொடுத்த மனு நிலுவையில் இருந்ததால் இது குறித்து மேற்படி மாநகராட்சி அலுவலகத்தில் விசாரித்தபோது, அந்த அலுவலகத்தில் உதவியாளராக உள்ள உலகநாதன் என்பவர் இப்படியெல்லாம் அலைந்தால் வேலை நடக்காது, தஞ்சாவூர் வடக்கு வாசலைச் சேர்ந்த நாகராஜ் என்பவரை போய் பாருங்கள் அவர்தான் மாநகராட்சி ஆணையருக்கு நெருக்கம், அவர் உங்கள் வேலையை முடித்து கொடுத்துவிடுவார் என்று சொன்னார். அதன்பிறகு நான் மேற்படி நாகராஜ் என்பவரை அவரது வீட்டில் சந்தித்து வரிவிதிப்பு சம்பந்தமாக என் மனு நகராட்சியில் நிலுவையில் உள்ள விபரத்தை தெரிவித்தேன். அவர் மாநகராட்சி ஆணையரிடம் பேசிவிட்டு என்னை கூப்பிடுவதாக கூறினார். அதன்படி ஜனவரி முதல் வாரத்தில் அவரது வீட்டில் நான் சந்தித்தபோது அவர் மாநகராட்சி ஆணையரிடம் பேசிவிட்டேன் அவர் ரூ.1,00,000/- கேட்டதாகவும், தான் ரூ.75,000/- தருவதாக பேசி முடித்துள்ளதாகவும், என்னை பணம் ஏற்பாடு செய்து கொண்டு வாருங்கள் என்று கூறினார். நான் பார்க்கின்றேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். அப்போது எனக்கும் அவருக்கும் நடைபெற்ற உரையாடலை எனது செல்போனில் பதிவு செய்துள்ளேன். அதன்பிறகு 10.01.2018 அன்று என்னை செல்போனில் தொடர்பு கொண்ட நாகாராஜ் தான் ஒரியண்டல் டவர் ஹோட்டலில் இருப்பதாக கூறி இரவு 8 மணியளவில் என்னை வரச்சொன்னார். நான் அவரை அங்கு சென்று பார்த்தபோது அவருடன் மாநகராட்சி காண்ட்ராக்டர் பாரதி என்பவரும் உடன் இருந்தார். நாகராஜ் என்னிடம் ஏன் பணம் ஏற்பாடு செய்யவில்லை என்று கேட்டார். நான் ரூ.75,000/- பெரிய தொகையாக உள்ளது என்னால் ஏற்பாடு செய்ய இயலவில்லை என்று கூறினேன். அதற்கு அவர்

இதில் 1 ரூபாய் குறைந்தாலும் மாநகராட்சி ஆணையர் வாங்கமாட்டார். உங்கள் வேலையை முடித்துகொடுக்கவும் மாட்டார். நீங்கள் பணம் ஏற்பாடு செய்துதான் ஆக வேண்டும். இல்லையென்றால் உங்கள் மனுவிற்கான வேலை நடக்காது என்று கூறிவிட்டார். இந்த உரையாடலையும் நான் எனது செல்போனில் பதிவு செய்துள்ளேன். மீண்டும் நேற்று 17.01.2018 அன்று மாலை என் செல்போனில் தொடர்பு கொண்ட நாகராஜ் இன்று (18.01.2018ம் தேதி) கட்டாயம் பணம் கொண்டு வாருங்கள் மாநகராட்சி ஆணையரிடம் நான் அழைத்துச் செல்கின்றேன், அவருக்கு பணம் கொடுத்தால்தான் உங்கள் வேலை முடியும் என்று கூறினார். மாநகராட்சி ஆணையர் கேட்ட பணத்தை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததால், அவர்கேட்ட ரூ.75,000/- பணத்தை ஏற்பாடு செய்துகொண்டு வந்துள்ளேன். இது குறித்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மனு எழுதிக்கொண்டு 20.09.2017 ந்தேதி மாநகராட்சி அலுவலகத்தில் எனக்கு வழங்கப்பட்ட அறிவிப்பு, 03.10.2017 அன்று மாநகராட்சி ஆணையருக்கு நான் கொடுத்த மனுவின் நகல் மற்றும் அத்துடன் இணைத்திருந்த வில்லங்கச்சான்று, மனை வரைபடம், அ பதிவேடு, சிட்டா, பொது அதிகார ஆவணம் ஆகியவற்றின் நகல்களை இத்துடன் இணைத்து அளிக்கின்றேன். என்னிடம் ரூ.75,000/- லஞ்சம் கேட்ட தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் திரு.மு.வரதராஜ் மற்றும் நாகராஜ் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/-. D.Sambandam, 18/01/18.

Madam, Received this petition on 18.01.2018 at 10.00 hrs and copy of the same is sent to SP SR, DVAC, Chennai for requesting PE. Sd/-. R.Tamilselvi, 18/01/18, Inspector of Police, V&AC, Thanjavur.

After receiving order from SP, SR, DVAC, Chennai to conduct Preliminary Enquiry in PE.17/2018/LB/TH, dated 18.01.2018 and then registered this PE in Thanjavur V&AC PE No.2/2018/LB/TH on 18.01.2018 at 11.00 hrs. Sd/-. R.Tamilselvi, 18/01/18, Inspector of Police, V&AC, Thanjavur.

முதல்நிலை விசாரணையில் எதிரிகள் பணம் கையூட்டாக கேட்டுள்ளதை உறுதிப்படுத்த புகார்தாரர் சம்பந்தம் என்பவர் ஆஜர் செய்த செல்போனிலிருந்த உரையாடல்களை பதிவிறக்கம் செய்து கேட்டதில், எதிரி திரு.மு.வரதராஜ், மாநகராட்சி ஆணையர், தஞ்சாவூர் அவர்களுக்காக நாகராஜ் என்பவர் வாதி சம்பந்தத்திடம் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்திற்கு காலிமனை வரி போட்டுக்கொடுக்க, ரூ.75000/- கையூட்டு கேட்டதற்கான முகாந்திரம் இருந்தது. மேலும் திரு.மு.வரதராஜ், மாநகராட்சி ஆணையர், தஞ்சாவூர் என்பவரது முன் நடத்தைகள் பற்றி விசாரணை செய்யப்பட்டது. இதன் விபரம் பற்றி 18.01.2018 ந் தேதி காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு

மற்றும் கண்காணிப்பு துறை, தெற்கு சரகம், சென்னை அவர்களுக்கு தெரிவித்தும், இன்று 18.01.2018 ந் தேதி 11.30 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.02/2018 பிரிவு 7 மற்றும் 8 ஊழல் தடுப்புச்சட்டம் 1988 ன்படி வழக்கு பதிவு செய்தேன். Sd/-. R.Tamilselvi, 18/01/18, Inspector of Police, V&AC, Thanjavur.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகளுடனும், புகார்தாரருக்கும் எதிரி நாகராஜுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல்களை வாதி பதிவு செய்து ஆஜர் செய்த செல்போனில் உள்ளதை கணிணி மூலம் குறுந்தகட்டில் (CD) பதிவிறக்கம் செய்யப்பட்டது, அந்த CD ஒன்றையும் இணைத்து கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தஞ்சாவூர் @ கும்பகோணம் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல்தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

18.01.18
Inspr / V&AC TNN